சுருக்கம்

நிர்வாகம் – தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை – பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் – தமிழ்நாட்டில் ஓய்வூதியம் பெற்ற பத்திரிகையாளர்களுக்கான குடும்ப ஓய்வூதிய திட்டம் – மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.4,500/–லிருந்து ரூ.4,750/– ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்.4)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்:3

நாள்: 11 01.2016
திருவள்ளுவர் ஆண்டு 2046
மன்மத வருடம் மார்கழி மாதம் –26 ம் நாள்
படிக்கப்பட்டது:

1 அரசாணை (நிலை) எண்.202, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள்.14.09.1998

2 அரசாணை (நிலை) எண்.239, செய்தி மற்றும் சுற்றுலா (நிர்.4)த் துறை, நாள் 04.10.2006.

3 அரசாணை (நிலை) எண்.302, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 22.07.2010.

4 அரசாணை (நிலை) எண்.192, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் .14.09.2011.

5. அரசாணை (நிலை) எண்.247, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள்07.10.2015.

––––

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் நலிவுற்ற நிலையிலுள்ள ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர்களின் குடும்ப நலன் கருதி, அரசு உரிய பரிசீலனைக்குப் பின்னர் அவரது துணைவியார் உயிரோடிருந்து அரசு ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்தால் அவரது கணவர் பெற்று வந்த மாதாந்திர ஓய்வூதிய தொகை ரூ.1,000/–லிருந்து 50 சதவீதமான, அதாவது ரூ.500/– மட்டும் அவரது வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. பின்னர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.1,500/–லிருந்து 2,000/– ஆக உயர்த்தியும் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி பத்திரிக்கையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.2,000/–லிருந்து ரூ.2,500/– ஆகவும், உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2) மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணைப்படி, பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் தமிழ்நாட்டில் ஓய்வூதியம் பெற்ற பத்திரிகையாளர்களுக்கான மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.3,000/–லிருந்து ரூ.4,500/–ஆக உயர்த்தியும் ஆணை வெளியிடப்பட்டது.

3) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் 29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் பத்திரிகையாளர்களது குடும்ப சூழ்நிலைகளையும் தற்போதைய காலசூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு பத்திரிகையாளர்களின் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.4,500/–லிருந்து ரூ.4,750/–ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.